Source: *Tamil Murasu*, p4
Date: 20 July 2016

எத்துறையில் மிளிர்ந்தாலும் சமூகப் பணியில் அக்கறை

வாழ்க்கைத் தொழிலுக்காக எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்தாலும் கல்வியில் சிறந்து விளங்கும் இளையர் சமூகப் பணியிலும் அக்கறை காட்டுகின்றனர். அத்தகைய மூவரின் சாதனைப் பயண அனுபவம் இதோ உங்கள் பார்வைக்கு.



மோனிகா கேப்ரியல்

முஹம்மது ஃபைரோஸ்

எண்ணிக்கையில் மிகச் சிலரே அடையக்கூடிய வெற்றியை ஈட்டி இருக்கிறார் குமாரி மோனிகா கேப்ரியல், 23.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் சட்டத் துறையில் பட்டக் கல்வி மேற்கொண்ட மோனிகா 'ஹானர்ஸ்' (முதல் வகுப்பு) தகுதியுடன் பட்டம் பெற்றுள்ளார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தில் கல்விப் பயணம் ஏற்ற இறக்கமாக அமைந்தது என்று கூறிய மோனிகா போட்டித்தன்மைமிக்க மாண வர்களுக்கு மத்தியில் எவ்வாறு தனித்து நிற்பது என தமக்குள் கேள்வி எழுந்தாலும் தொடக்கத்தில் எந்த வொரு வானளாவிய எதிர்பார்ப்பையும் உருவாக்கிக்கொள்ளவில்லை என்றார்.

கடந்த வாரம் நடைபெற்ற பல் கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பட்டச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட இவர், விடாமுயற்சி, அயராத உழைப்பு ஆகியவற்றால் வெற்றிக்கனி கிட்டியதென்றார்.

"தொடக்கத்தில், யதார்த்தமில்லாத எதிர்பார்ப்புகளை வைத்திருப்பது ஆரோக்கியமற்றது என்பதை உணர்ந் தேன். ஆனால், துறைத் தலைவரின் சாதனைப் பட்டியலில் தொடர்ச்சியாக இரு ஆண்டுகள் இடம்பிடித்தவுடன் எனக்குள் நம்பிக்கை பிறந்தது. நாம் செய்யும் செயலே நாம் யார் என்பதைப் பிரதிபலிக்கும்," என்றார் மோனிகா.

சிறந்த தேர்ச்சி பெற்றது தம்முடைய முயற்சிக்குக் கிடைத்த பலன் என்று கூறிய மோனிகாவுக்கு, பல நேரங்களில் வேலைப்பளுவினால் அடுத்த நாளுக்கு முடிக்க வேண்டிய வாசிப்புகளைக்கூட முடிக்க முடியாமல் போன நினைவு களும் உண்டு.

"சட்டத் துறை வழங்கும் கடுமை யான பாடத்திட்டம் ஏராளமான சவால்களையும் வாய்ப்புகளையும் அள்ளித் தந்தது. கட்சிக்காரருக்கு கடிதம் வரைவது, வர்த்தக உடன் பாட்டை எழுதுவது, கொலைக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆதரவாகக் குற்ற வியல் தற்காப்பு வழக்கறிஞராக வாதாடுவது எனப் பல புதிய அனுபவங்கள் கிடைத்தன," என்று தமது கல்விப் பயணம் பற்றி விவரித் தார் மோனிகா.

அயர்லாந்திலுள்ள 'டிரினிட்டி காலெஜ் டப்ளின்' பல்கலைக்கழகத்தில் மாணவர் பரிமாற்றத் திட்டத்தில் பங் கேற்றது இவருக்கு மறக்கமுடியாத அனுபவமாக அமைந்தது. குறிப்பிடத் தக்க காலகட்டத்திற்கு குடும் பத்தைவிட்டுப் பிரிந்திருந்தது சவாலாக அமைந்தாலும் துணிச்சல், தன்னம் பிக்கை போன்ற பண்புகளை வளர்த்துக்கொள்ள மோனிகாவுக்கு அது வாய்ப்பளித்தது.

வேறுபட்ட கலாசாரப் பின்னணியைச் சேர்ந்த மாணவர்களைச் சந்தித்து அவர்களுடன் சேர்ந்து படித்த நாட்கள், பிற நாடுகளின் கல்வித் திட்டத்தைப் பற்றி அறிந்துகொண்டது, ஐரோப்பா வின் பல நகரங்களுக்குச் சென்று சுற்றிப் பார்த்த நினைவுகள் போன்றவை மனதில் என்றென்றும் பதிந்திருக்கும் என்றார் மோனிகா.

'லீப்' எனும் சட்டக் கல்வி விழிப்புணர்வுத் திட்டத்தின்கீழ் 13க்கும் 17க்கும் இடைப்பட்ட வயதுடைய இளையர்களிடையே சட்டம் தொடர் பான விவகாரங்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும் இவர் பங்களித்தார்.

"தேசிய அளவில் குற்றச்செயல் களைத் தடுக்க வேண்டுமெனில் தத்தம் நடவடிக்கைகளினால் சட்ட ரீதியாக ஏற்படும் பின்விளைவுகளைப் பற்றி வசதி குறைந்த இளையர்கள் அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை இத்திட்டத்தின்வழி உணர்ந்தேன்," என்றார் இவர்.

சிங்கப்பூரின் சட்டத் துறைக்குப் பங்களிக்க ஆவலுடன் இருக்கும் மோனிகா, வசதி குறைந்தவர்களுக்கு இலவச சட்ட உதவியை வழங்கி சமூகத்துக்குச் சேவையாற்ற விரும்பு கிறார்.

கனவை நனவாக்க வேண்டும் என்று எப்போதும் வேட்கை கொண் டுள்ள மோனிகா, "குடும்ப ஆதரவு, பேராசிரியர்களின் வழிகாட்டுதல் உள் ளிட்ட உதவிகளுடன் தளராத தன்முனைப்பு, கடின உழைப்பு போன்ற பண்புகள் இருந்தால் முடியாதது ஒன்றுமே இல்லை," என்கிறார்.

சிந்தனையைத் தூண்டிய பாடத்திட்டத்தால் சிறப்புற முன்னேறிய அம்ரிதா

சுதாஸகி ராமன்



பெற்றோர் ராதாகிருஷ்ணன் ராஜகுமார், கீதா ஆகியோருடன் அம்ரிதா.

> மாறுபட்ட துறைகளில் பொருளியல் எந்த விதத்தில் பொருந்தும் என்பதையும் அத்துறைகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு பொறியியல் கொள்கைகளால் தீர்வுகளைக் கண்டறியலாம் என்பதைப் பற்றியும் இந்தப் பாடத்திட்டம் என்னை சிந்திக்கத் தூண்டியது.
>
> குமாரி அம்ரிதா ராஜகுமார்

எந்தவொரு பிரச்சினைக்கும் நடை முறைக்குத் தகுந்தபடி லாபகர மான தீர்வுகளைக் கண்டுபிடித்து சமூகத்திற்குப் பொறியாளர்கள் ஆற்றும் முக்கிய பணியை குமாரி அம்ரிதா ராஜகுமார் இளம் வயதிலேயே புரிந்துகொண்டார்.

பொறியாளர்களாகப் பணிபுரி யும் தம் பெற்றோரைக் கவனித்து வந்த அவர், அவர்கள் காட்டிய பாதையைப் பின்பற்றி சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் மின்னியல் பொறியியல் துறையில் சேர்ந்தார்.

அத்துறையில் சிறந்து விளங் கிய 22 வயது அம்ரிதா, பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியின் பலனா கக் கடந்த வாரம் 'ஹானர்ஸ்' (உயர் சிறப்புத் தேர்ச்சி) தகுதியுடன் பட்டம் பெற்றார்.

"என்னை வளர்த்த சமூகத் திற்கு என்னால் இயன்றதைத் திருப்பிக்கொடுக்க எண்ணி னேன். அதை என் நீண்ட நாள் குறிக்கோளாக வைத்திருந்தேன். தேசிய தின அணிவகுப்பு, தமிழ் சார்ந்த நடவடிக்கைகள், தொண்டூழியம் போன்றவற்றில் ஈடுபடுவதன் வழியாக என்னால் இயன்ற உதவிகளை மற்றவர் களுக்குச் செய்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்," என்றார் அவர்.

பல்கலைக்கழகத்தில் பலதரப் பட்ட அணுகுமுறையின் மூலமாகப் பொறியியல் பாடங்களோடு நாட கக்கலை, பொருளியல், பலவகை உயிரினம் போன்ற மற்ற துறைப் பாடங்களையும் பயில அவருக்கு வாய்ப்பு கிடைத்தது.

இதனால் பொறியியல் துறையை வித்தியாசமான கண் ணோட்டத்தில் தம்மால் பார்க்க முடிந்ததை அம்ரிதா சுட்டிக் காட்டினார்.

"மாறுபட்ட துறைகளில் பொரு ளியல் எந்த விதத்தில் பொருந்தும் என்பதையும் அத்துறைகளில் ஏற் படும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு பொறியியல் கொள்கைகளால் தீர் வுகளைக் கண்டறியலாம் என்பதைப் பற்றியும் இந்த பாடத் திட்டம் என்னைச் சிந்திக்கத் தூண்டியது," என்றார் அவர்.

முதல் ஆண்டு படிப்பு சவாலாக இருந்ததால் கல்வியில் மேலோங் கத் தடுமாறிய அம்ரிதா, தொடர்ந்து உழைத்தார்.

அவருடைய விடாமுயற்சி, கடின உழைப்பின் பலன் அவ ருடைய மதிப்பெண்களில் புலப் பட்டது. இரண்டாவது ஆண்டில் மின்னியல் பொறியியல் துறையின் சிறந்த மாணவராக அவர் உயர்ந்தார். அதற்காக அவர் 'மைக்ரான்' விருதையும் பெற்றார்.

மாணவர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் இங்கிலாந்தில் உள்ள ஷெஃபீல்ட் பல்கலைக் கழகத்தில் ஆறு மாதங்கள் பயின்ற அம்ரிதா, அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் தமது பள்ளியைப் பிரதிநிதித்து கலந்துகொண்டார்.

இவ்வாறு தம் பல்கலைக்கழகப் பயணத்தின்போது பல விருதுகள், உபகார சம்பளங்கள் ஆகிவற்றைப் பெற்ற அம்ரிதா, தற்போது அர சாங்கத்தைச் சார்ந்த கழகம் ஒன்றில் பணியாற்றுகிறார்.

இந்தியக் கலாசாரத்துடன் தம்மைப் பிணைத்துக்கொள்ள விரும்பும் இந்த இளம் பொறியாளர் எவ்வளவு அலுவல்கள் இருந்தாலும் பரதநாட்டியத்தைத் தொடர்ந்து கற்று வருகிறார்.

சவால்களைச் சாதனையாக்கிய சரவணன்

நித்திஷ் செந்தூர்

தளராத மனதுடன் வற்றாத உழைப்பின் காரணமாக உன்னதத் தேர்ச்சி பெற்றுள்ளார் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சரவணன் குணசீலன், 25.

இம்மாதம் ஒன்பதாம் தேதி சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்திலிருந்து உயிர்அறிவியல் துறையில் 'ஹானர்ஸ்' (உயர் சிறப் புத் தேர்ச்சி) தகுதியுடன் இளங்கலைப் பட்டம் பெற்றார்.

வெற்றி இவருக்கு அவ்வளவு எளிதில் கிட்டிவிடவில்லை. கல்விச் செலவுகளைச் சமாளிக்க அவருக்கு நிதி நெருக்கடி இருந்தது. வங்கியிலிருந்து கல்விக்கடன் பெற்றிருந்தபோதும் படிப்பு சார்ந்த இதர செலவுகளை அவரால் சமாளிக்க இயலவில்லை. நிதிச் சுமையைக் குறைக்க மாணவர்களுக்குத் துணைப்பாட வகுப்புகளை நடத்தினார்.

நேரத்தை நன்கு வகுத்து, படிப்பையும் சமூக நடவடிக்கை களில் தனது ஈடுபாட்டையும் நேர்த்தியாக நிர்வகித்துக் கொண்டார் சரவணன்.

பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது, இவர் 'என்யுஎஸ்எஸ்யு எங்கேஜ்' எனும் புதிய புறப்பாட நடவடிக்கையை உருவாக்கினார்.

இதர துறையில் பயிலும் மாண வர்களும் இந்தப் புறப்பாட நடவடிக்கையில் இணைந்து தங்களுக்குள் கருத்துகளைப் பரி மாறி, துடிப்புமிக்க மாணவர் சமூகத்தை உருவாக்க இது வழி வகுத்தது.

"வாரந்தோறும் 'யூசுஃப் இஷாக் ஹவுஸ்' எனும் மாணவர் கூடத்தில் நடைபெறும் ஒன்றுகூடலின்போது ஆண்–பெண் உறவு, படிப்பு, மன உளைச்சல் எனப் பலதரப்பட்ட விஷயங்களைப் பற்றி கலந்துரை யாடல் நடைபெறும்," என சரவணன் கூறினார்.

சமூகப் பணிகளில் அதிக நாட்டம் செலுத்திய சரவணன் நான்கு முறை வியட்னாமுக்குச் சென்று, அங்குள்ள கிராம மக்களுக்குச் சுகாதாரத்தின் முக் கியத்துவத்தை எடுத்துரைத்தார். அதுமட்டுமின்றி, அங்கு சில பள்ளிகளையும் அவற்றின் சமையல் அறைகளையும் கட்ட உதவி செய்துள்ளார் சரவணன்.

செவி வழியாகக் கேட்டுப் பாடங்களைப் புரிந்துகொள்வதில் தமக்கு ஆர்வம் மிகுதி எனக் குறிப்பிட்ட அவர், விரி வுரையாளர் பாடங்களைக் கற்பிக்கும்போது அதனைக் கூர்ந்து கேட்டுக் குறிப்புகளை எடுத்துக்கொள்வதோடு பாடங்களைக் குரல் பதிவும் எடுத்துக்கொள்வார். பாடங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு மீண்டும் அந்தக் குரல் பதிவுகளை கேட்பதாகச் சொன்னார் சரவணன்.

குழந்தைகளை அதிகம் பாதிக்கும் கை, கால், வாய்ப் புண் நோயைக் குணப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய மருந்து பற்றிய ஆய்வை இறுதி ஆண்டு ஒப்படைப்பிற் காக அவர் மேற்கொண்டார். இந்த ஒப்படைப்பு இம்மாதம் 25, 26 தேதிகளில் ஏ–ஸ்டார் அமைப்பின் 'மூலக்கூறு, செல்உயிரியல்' கழகத்தினால் நடத்தப்படவுள்ள கை, கால், வாய்ப் புண் நோய்க்கான அனைத்துலக மாநாட்டில் படைப்பதற்குத் தேர்வுபெற் றுள்ளது.

அடுத்த ஆண்டு யோங் லூ லின் மருத்துவப் பள்ளியின் முனைவர் பட்டக் கல்வியில் சேரவிருக்கும் அவர், "வெளி நாடுகளுக்குச் சென்று புதிய அனுபவங்களைப் பெற்று எனது துறை சார்ந்த புரிதலை இன்னும் வலுப்படுத் திக்கொள்ள வேண்டும் என்ற வேட்கையும் உள்ளது" என்று தெரிவித்தார்.

அவரது துறையில் இரண்டாவது சிறந்த மாணவராகச் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள சரவணனுக்கு 'சிங்கப்பூர் மைக்ரோபையாலஜி அண்ட் பையோடெக்னாலஜி' சமூகத்தின் விருதும் பரிசும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

கல்வி மட்டுமின்றி உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தும் சரவணன் சைக்கிளோட்டுதல், மெதுவோட்டம் ஆகியவற்றைத் தவறாமல் மேற்கொள்கிறார்.



சரவணன் குணசீலன்
படங்கள்: சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம்

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.